**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 200 මට්ටම - 2022**
**இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 200 வது தேர்ச்சி மட்டம் - 2022**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 200 Level - 2022**
**(Held in May, 2023)**

## SUPE 208: DISASTER MANAGEMENT
## SUPE 208: அனர்த்த முகாமைத்துவம்

நேரம்: **மூன்று (03) மணித்தியாலங்கள்**
**நான்கு (04) வினாக்களுக்கு** மாத்திரம் விடை எழுதுக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.
இவ்வினாப்பத்திரத்தில் மொத்தமாக எட்டு வினாக்கள் உள்ளன.

---

(1) அ. அழிவு (hazards) மற்றும் அனர்த்தம் (disasters) ஆகியவற்றுக்கான வேறுபாட்டினை சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

ஆ. துருக்கி மற்றும் சிறியா ஆகிய நாடுகளில் அன்மையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினை கற்பதன் ஊடாக, இயற்கை அழிவொன்று எவ்வாறு இயற்கை அனர்த்தமொன்றாக மாற்றமடைகின்றதுவென விளக்குக. **(15 புள்ளிகள்)**

(2) அ. சம்பூர்ணமான அனர்த்த முகாமைத்துவ வட்டமொன்றினை (disaster management cycle) வரைந்து அதன் எல்லா கட்டங்களையும் (phases) பெயரிடுக. **(10 புள்ளிகள்)**

ஆ. அனர்த்த முகாமைத்துவ வட்டத்தில் தயார்நிலை கட்டமானது, (preparedness phase) இலங்கையின் வெள்ள முகாமைத்துவத்திற்கு (flood management) ஏன் மிகவும் முக்கியத்துவமானதாக காணப்படுகின்றதுவென பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் விளக்குக. **(15 புள்ளிகள்)**

(3) இலங்கையின் நிலச்சரிவிற்கான காரணங்கள், விளைவுகள் மற்றும் தாக்கத் தணிப்பு (குறைப்பு) உபாயமுறைகள் (mitigation strategies) ஆகியவற்றினை பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் விவரிக்க. **(25 புள்ளிகள்)**

(4) அ. சுனாமியொன்று எவ்வாறு உருவாகின்றதுவென விளக்குக. **(05 புள்ளிகள்)**

ஆ. கரையோர சமூகங்களானவை எவ்வாறு சுனாமியொன்று தோன்றுவதற்கு முன்னரும் சுனாமியின் பின்னரும் தயாராக வேண்டுமென விவரிக்க. **(20 புள்ளிகள்)**

(5) **ஒன்றில்,**
இலங்கையில் சூறாவளியால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதியொன்றின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் ஒருவராக நீங்கள் கடமைப்புறிகின்றீர்களென கருதுக. சூறாவளி வீட்டு சேத மதிப்பீட்டொன்றினை செய்யும்படி (cyclone housing damage assessment) உங்கள் இயக்குனரால் நீங்கள் வேண்டப்பட்டுள்ளீர்கள். இதற்காக, தகுந்த உப-தலைப்புக்களின் உதவியுடன் பொருத்தமான வீட்டு சேத மதிப்பீட்டு படிவமொன்றினை (assessment form) தயாரிக்க. **(25 புள்ளிகள்)**

**அல்லது**
நீங்கள் உங்கள் கிராமம்/குடியிருப்பு பகுதியில் காணப்படுகின்ற சமூக அமைப்பொன்றில் அங்கத்தவரொருவர் எனக் கருதுக. உங்கள் பகுதியானது திடீரென நிலச்சரிவொன்றிற்கு உள்ளாகி பாதிப்புக்குள்ளாகின்றதெனின் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்களென விளக்குக. **(25 புள்ளிகள்)**

(6) பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் அனர்த்த முகாமைத்துவ பாடநெறியை கற்பிப்பதானது இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ செயல்முறைக்கு எவ்வாறு பங்களிக்க முடியுமென்பதனை விமர்சனரீதியாக விளக்குக. **(25 புள்ளிகள்)**

(7) அ. தொலையுணர்வு (Remote Sensing) என்பதை வரையறுக்கவும். **(05 புள்ளிகள்)**

ஆ. காட்டுத்தீயை (forest fire) முகாமைத்துவம் செய்ய தொலையுணர்வு மற்றும் புவியிடங்காட்டி (Global Positioning System) ஆகியவற்றினை எவ்வாறு பயன்படுத்த முடியுமென தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(20 புள்ளிகள்)**

(8) இலங்கையின் அனர்த்த முகாமைத்துவத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் (Disaster Management Center) பங்களிப்பினை பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் விளக்குக. **(25 புள்ளிகள்)**